பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

**08 06 2026 MONDAY 6.30 PM**

**<u>மாநிலச்செய்திகள்</u>**

**<u>தலைப்புச் செய்திகள்</u>**

1. நாட்டின் வளர்ச்சி நடப்பாண்டில் எட்டு சதவீதத்திற்கும் கூடுதலாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. நம்பிக்கை, வளர்ச்சி, மக்கள் நலன் என்பதை தாரக மந்திரமாக கொண்டு மத்திய அரசு செயல்பட்டு வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

3. மின்தடை பிரச்சினைக்கு உடனுக்குடன் தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு கூறியுள்ளது.

4. தமிழகத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

5. ஆப்கானிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா ஒரு இன்னிங்ஸ் 300 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

. . . இனி விரிவான செய்திகள் . . .

<<<<<<>>>>>>

நாட்டின் வளர்ச்சி விகிதம் நடப்பாண்டில் எட்டு சதவீதத்திற்கும் கூடுதலாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இதுதொடர்பாக உலக வங்கியின் இயக்குநர் திரு **Neelkanth Mishra** செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியையும் பகிர்ந்துள்ளார்.

மேற்காசியாவில் நிலவும் பதற்றமான சூழலிலும் கூட இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி சீராக உள்ளது என்றும் அவர் அந்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக **25** கோடி பேர் வறுமையிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஏழைகளின் மேம்பாட்டிற்காக மத்திய அரசு கடந்த **12** ஆண்டுகளில் நிறைவேற்றிய திட்டங்களை பட்டியலிட்டுள்ளார்.

**58** கோடிக்கும் மேற்பட்ட ஜன்தன் வங்கிக்கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளதாக அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

ஆயுஷ்மான் பாரத் அட்டைகள் 44 கோடி பேருக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நம்பிக்கை, வளர்ச்சி, மக்கள் நலன் என்பதை தாரக மந்திரமாக கொண்டு மத்திய அரசு செயல்பட்டு வருவதாகவும் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

சீரான மின்விநியோகத்தை உறுதி செய்வதற்காக பல்வேறு நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொண்டு வருவதாக மின்துறை அமைச்சர் திரு நிர்மல்குமார் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

மின்தடை ஏற்படும் இடங்களில் அதனை உடனுக்குடன் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

***(Sound Byte — நிர்மல் குமார் - 39 Sec. )***

<<<<<<>>>>>>

வருகை இல்லா ஆவணப்பதிவு திமுக ஆட்சி காலத்தில் நிறைவேற்றப்பட்ட திட்டம் என்றும், அதனை புதிய திட்டம் போன்று தவெக அரசு விளம்பரப்படுத்துவதாகவும் திமுக குற்றம் சாட்டியுள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், ஜனவரி மாதத்திலேயே திமுக அரசு இந்த திட்டத்தை நிறைவேற்றியதாக கூறியுள்ளது.

<<<<<<>>>>>>

கருத்து சுதந்திரத்தை பறிக்கும் வகையில் தவெக அரசு செயல்படுவதாக அஇஅதிமுக குற்றம் சாட்டியுள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், அரசுக்கு எதிராக கருத்துகளை தெரிவித்ததற்காக **U Tuber** மாரிதாஸ் மீது கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தெரிவித்துள்ளது.

ஜனநாயக குரலை நெறிக்க முயலும் தவெக அரசின் இந்த நடவடிக்கை கண்டிக்கத்தக்கது என்றும் அந்த அறிக்கையில் அஇஅதிமுக கூறியுள்ளது.

<<<<<<>>>>>>

உயர்நீதிமன்ற உத்தரவுக்கு பின்னரும் கூட திருப்பரங்குன்றம் தீபத் தூணில் தீபம் ஏற்ற விட மாட்டோம் என்று மாநில அமைச்சர் திரு

நிர்மல் குமார் கூறியிருப்பது வழிபாட்டு உரிமைகளுக்கு எதிரானது என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், உயர்நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் அளித்த தீர்ப்பினை மதிக்காமல், ஒரு சாராருக்கு ஆதரவாக அமைச்சர் கருத்து தெரிவித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இதுதான் தவெக-வின் மத நல்லிணக்க அரசியலா என்றும் திரு நயினார் நாகேந்திரன் வினவியுள்ளார்.

<<<<<<>>>>>>

திருவான்மியூர் உத்தண்டி உயர்மட்ட பால ஒப்பந்தத்தை ரத்து செய்வது குறித்து தவெக அரசு ஆய்வு செய்து வருவது வரவேற்கத்தக்கது என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், 700 கோடி ரூபாய் ஊழல் முறைகேடு தொடர்பான இந்த ஒப்பந்தம் குறித்து சிபிஐ விசாரணைக்கு தவெக அரசு உத்தரவிட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தின் தொழில் வளர்ச்சியை பெருக்குவதில் தவெக அரசு கவனம் செலுத்தவில்லை என்று அமமுக பொதுச்செயலாளர் திரு டி டி வி தினகரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழக அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பல்வேறு தொழில் நிறுவனங்கள் பிற மாநிலங்களுக்கு செல்வதாக குறிப்பிட்டுள்ளார்.

இதனை கருத்தில்கொண்டு பொருளாதார மேம்பாட்டிலும், புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும் தவெக அரசு கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்றும் திரு டி டி வி தினகரன் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை சம்பவங்கள் அதிகரித்து வருவதாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச்செயலாளர் திரு சண்முகம் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தூத்துக்குடி மாவட்ம் ஸ்ரீவைகுண்டம் அருகே வேலைவாங்கித் தருவதாக இளம்பெண்ணை அழைத்து சென்று தவெக நிர்வாகிகள்

பாலியல் வன்கொடுமையில் ஈடுபட்ட சம்பவம் அதிர்ச்சி அளிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த குற்றச்செயலில் தொடர்புடையவர்கள் ஆளுங்கட்சியை சேர்ந்தவர்கள் என்பதால் எவ்வித அரசியல் தலையீடும் இன்றி விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று அவர் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு உரிய பாதுகாப்பும், அரசு வேலையும், நிவாரண உதவியும் வழங்கிட வேண்டும் என்றும் திரு சண்முகம் கோரிக்கை விடுத்துள்ளார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — வி ஆர் துரை - 37 Sec. )***

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

காஞ்சிபுரம் மாவட்டத்தில் இலவச வீட்டுமனை பட்டாக்களை ஆட்சியர் திருமதி சினேகா இன்று பயனாளிகளுக்கு வழங்கினார்.

--------------------

உதகை அரசு தாவரவியல் பூங்காவை உருவாக்கிய **Mcivor**-ரின் நினைவுதினத்தையொட்டி, அன்னாரது நினைவிடத்தில் ஆட்சியர் திருமதி லஷ்மி பவ்ய தண்ணீரு மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

--------------------

நாமக்கல் மாவட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கை மனுக்கள் தொடர்பாக குறித்த நேரத்திற்குள் நடவடிக்கை எடுக்குமாறு ஆட்சியர் திரு மதுபாலன் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

-------------

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டையில் தீயணைப்புத்துறை சார்பில், பேரிடர் கால தற்காப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா ஒரு இன்னிங்ஸ் **300** ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

நியூ சண்டிகரில் நடைபெற்ற இப்போட்டியின் மூன்றாம் நாளான இன்று, ஐந்து விக்கெட் இழப்பிற்கு, **113** ரன் என்ற நேற்றைய ஸ்கோருடன் முதல் இன்னிங்ஸை தொடர்ந்து ஆடிய ஆப்கானிஸ்தான், **152** ரன்னுக்கு ஆட்டமிழந்து ஃபாலோஆனை பெற்றது.

பின்னர் இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்து ஆடிய ஆப்கானிஸ்தான் அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்து **112** ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

அதிகபட்சமாக **Sediqullah Atal 42** ரன் எடுத்தார்.

எஞ்சியவர்கள் சொற்ப ரன்னுக்கு விக்கெட்டுகளை பறிகொடுத்தனர்.

வாஷிங்டன் சுந்தர் **4** விக்கெட்டுகளையும், குல்தீப் யாதவ் **3** விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இந்தியா முதல் இன்னிங்சில் **8** விக்கெட் இழப்பிற்கு **564** ரன் எடுத்திருந்த நிலையில் ஆட்டத்தை முடித்துக்கொள்வதாக அறிவித்தது.

-------------

**Libema** ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி — அமெரிக்காவின் ராஜீவ் ராம் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை **7-6, 4-6, 10-7** என்ற செட் கணக்கில், அமெரிக்காவின் **Evanking** — ஸ்வீடனின் **Andre Goransson** இணையை வென்றது.

-------------------

அமெரிக்காவில் நடைபெற்ற சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் — **Rithvik Choudary Bollipalli** இணை பட்டம் வென்றது.

ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை **7-6, 7-6** என்ற செட் கணக்கில் அமெரிக்காவின் **Zachary Fuchs** — **Wally Thayne** இணையை வென்றது.

-------------

**<<<<<<END>>>>>>**